

Lifeline மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No1 Pages 4 Sunday, 24 February 2008 Free Copy

திருகோணமலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் இன்னல்களை எதிர்நோக்கும் சிறுவர்கள்

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் 2006ஆம் ஆண்டு ஏற்பட்ட அசம்பாவிதங்களின் போது மக்கள் பல் வேறு விதமான பாதிப்புகளுக்கு உட்பட் டனர். மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து அறிந்து கொள்ளும் நோக்கில் மூதூர் பிரதேசத்தில் கிராம சேவையாளராக கடமையாற்றும் க.யோகேஸ்வரனை செவ்வி கண்டார் சத்தியவாணி சுப்ரமணியம்.

நான் கட்டவளைச்சான், தெற்குப்பள்ளிக்குடியிருப்புஆகிய இரண்டு கிராம சேவகர் பிரிவுகளைப் பார்க்கிறேன்.

கடந்த 2006 ஆகஸ்ட் மாதம் மூதூர்ப் பிரதேசத்தில் ஏற்பட்ட வன்செயலில் மூதூர் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டனர்.

இதனால், மக்கள் இடம்பெயர்ந்து கதிரவெளி, வாகரைப் பிரதேசங்களில் தஞ்சமடைந்தனர். அங்கும் பிரச்சினைகள் தொடர்ந்தன. முகாம்களில் அகதிகளாக இருந்த மக்கள் 2007 ஆம் ஆண்டு இரண்டாம் மாதமளவில் கிளிவெட்டி முகாமிற்குக் கூட்டி வரப்பட்டனர். பின்னர் அங்கிருந்து பட்டித்தெரு முகாமிற்கு அவர்கள் மாற்றப்பட்டனர்.

மக்கள் மிகவும் கஷ்டப்பட்டனர். ஒருவேளைச் சாப்பாட்டிற்கே வழியின்றி இருந்தனர். இருபக்கங்களிலிருந்தும் செல்வீச்சுக்கள் இடம்பெற்றன.

கட்டைவிரிச்சான், சேனையூர், கடற் கரைச்சேனை, சம்பூர், பள்ளிக்குடியிருப்பு, பூனைத்தீவு, நவரத்தினபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மரங்களுக்குக் கீழே சிரமங்களுக்கு மத்தியில் தங்கியிருந்தனர். அங்கிருந்து

ஒருபுறம் உணவுக் கஷ்டம் மறுபுறம் பாடசாலைகளுக்கு செல்ல முடியாத நிலை. இடம்பெயர்ந்து வரும் போது வழியில் சிறுவர்கள் சிலர் இறந்துமுள்ளனர்

வாகரைக்கு அகதிகளாகச் சென்றனர். அங்கும் இவர்கள் சாப்பாட்டுக்கே வழியின்றியே காலத்தைக் கழிக்கின்றனர்.

இறுதியாக மட்டக்களப்புக்கு சென்றபின்தான் ஓரளவிற்கு அரசாங்க உதவிகள் கிடைக்கத் தொடங்கின.

தற்பொழுது மீண்டும் அம்மக்களை மீளக்குடியமரச் செய்வதற்கு ஒழுங்குகளை செய்து வருகின்றோம்.

இதில் கூடுதலாக பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்களே. ஒருபுறம் உணவுக் கஷ்டம் மறுபுறம் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலை. இடம்பெயர்ந்து வரும் போது வழியில் சிறுவர்கள் சிலர் இறந்துமுள்ளனர். மட்டக்களப்பிற்கு இவர்கள் வரும்போது அவர்களிடம் கொப்பி, புத்தகங்கள் எதுவும் இருக்கவில்லை. கல்வியைப்பற்றிச் சிந்திப்பதற்கு முடியாத நிலையிலேயே அவர்கள் இருந்தனர்.

இங்கு வந்த பிறகு அரசாங்கத்தால் யூனிபோம் மட்டுமே வழங்கப்பட்டன.

பாடசாலை உபகரணங்கள் உட்பட அனைத்து உதவிகளையும் சேவ்த சில்றனே வழங்கியது. தற்போது நூற்றுக்கு 95 வீதமானோரின் நிலை பரவாயில்லை.

அரசாங்கத்தால் உலக உணவுத் திட்டத்தின் கீழ் உணவை மட்டுமே வழங்குகிறது.வேறு உதவிகள் ஏதுமில்லை.

சேவ் த சில்றன் தான் இந்த இரண்டு முகாமிலுமுள்ள மக்களுக்கு உதவி செய்கிறது. பிள்ளைகளின் நலனில் கூடுதல் அக்கறை எடுத்து செயற்படுகின்றது.



மூதூர் பிரதேச கிராம சேவையாளர் யோகேஸ்வரன்

மூதூர் கிழக்குப் பகுதி மக்கள் மட்டக்களப்பிலும் அங்குமிங்குமாக வாழ்கின்றனர்.

கிளிவெட்டி மக்களைப் பொறுத்தமட்டில் 669 குடும்பங்களில் பட்டித்திடலில் மட்டும் 312 குடும்பங்களே தற்போதுள்ளன. மொத்தமாகவுள்ள 7000 குடும்பங்களில் தற்போது மேற்படி குடும்பங்களே உள்ளன.



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 9.45 முதல் 10.15 வரையும் புத்தளம் மாவட்டத்தில் அநூர் எப்.எம். (FM 96.1 Mhz) வானொலி ஊடாக ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 முதல் 7.15 வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

மீண்டும் வாழ்வோம்

மீண்டும் வாழ்வோம் திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர்களுக்காக வும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயல்த்திட்ட அமைப்புகளின் ஒரு அங்கமாகும். மீண்டும் வாழ்வோம் செயல்த்திட்டமானது அரசாங்கம் மற்றும் சர்வதேச/ உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனையோர் இடம்பெயர்ந்த மக்களுக்காக ஆற்றும் செயற்பாடுகள், தகவல்கள் குறித்த சரியான செய்தியினை வெளியிடுவதுடன் மிக முக்கியமாக அவர்கள் எவ்வாறு இவற்றை பெற்றுக் கொள்ளலாம், எவ்வாறு நன்மையடையலாம் போன்ற சேவைகளை வழங்குகின்றது.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
மின்அஞ்சல்: info@lifelinesrilanka.com

சுவடுகள்

✱ அரச மற்றும் மனிதாபிமான அமைப்புகளின் கூட்டமைப்பின் (IASC, அரசாங்கம் மற்றும் மனிதாபிமான அமைப்புக்களின் வலையமைப்பு) நடப்பு அறிக்கையின் (இல.113 7-14 பெப்ரவரி 2008)படி கிராம சேவையாளர்களால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் உள்வாரியான **இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை** 260,096 ஆகும்.

✱ **திருகோணமலை** மாவட்டத்தின் கிழக்கு மூதூர் உயர் பாதுகாப்பு வலயத்தில் வசித்து வந்தவர்களை இறால்குழி மற்றும் பள்ளி குடியிருப்பு பிரதேசங்களில் மீள் குடியேற்றி வாழ்வாதார உதவிகளை வழங்கு வதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் முன்வைத்துள் ளது. இதன் முதல் கட்ட நடவடிக்கையாக 200 குடும் பங்கள் இறால்குழியிலும் 500 குடும்பங்கள் பள்ளிக் குடியிருப்பிலும் மீள் குடியேற்றப்படவுள்ளனர். இதற் கான காணி தெரிவு செய்யப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

✱ **யாழ்ப்பாணம்** அல்லைப்பிட்டி மற்றும் வேலனை பிரதேச செயலாளர் பிரிவுகளில் 60 குடும்பங்களை மீள் குடியமர்த்துவதற்கான செயல்த்திட்டமொன்றை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் முன்வைத்துள்ளார். அந்த பிரதேசங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து சில தொண்டர் அமைப்புகள் கவலை தெரிவித்துள்ள போதிலும் உள்நாட்டில் இடம்பெயர்தல் தொடர்பான வழிகாட்டல் கோட்பாடுகளுக்கு அமைவாகவே மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பேசும் படம்



படத்திலிருப்பவர் 1990 களில் மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்தவர். தனது பிறப்பிடத்தில் காணி மற்றும் கல்வி வசதிகளுடன் வாழ்ந்த இவர் தற்பொழுது புத்தளம் மாவட்டத்தில் கரணவாயில் உள்ள சபாமார்வு அகதி முகாமின் சிறிய குடிசையில் இருக்கின் றார். 'நான் அகதி என கூறப்படுவதை வெறுக்கின்றேன்' என்கிறார் இவர்.

மீண்டும் வாழ்வோம் தொடர்பான உங்கள் எண்ணங்களையும் ஆக்கங்களையும் எங்களுடன் பகிர்ந்து கொள்ள

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
மின்அஞ்சல்: info@lifelinesrilanka.com

தன்னம்பிக்கையுடனும் சுய தொழிலுடனும் பயணம் போகும் சமய புரம்

வவுனியா நகரிலிருந்து சுமார் பத்துக் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது சமய புரம். இது ஒரு மீள் குடியேற்றப்பட்ட மக் களைக் கொண்ட ஒரு கிராமமாகும். இங்கு மீள் குடியமர்ந்த மக்கள் சுயதொழி லையே மேற்கொண்டு வருகின்றனர். இது பற்றிய தகவல்களை சத்தியவாணி சுப்பிரமணியம் தொகுத்துத் தருகின்றார்.

அறுபத்தாறு வயதான மாரியாயி ஆடு களுக்கு உணவளித்துக் கொண்டிருக்கி றார். அவருடைய முகம் நம்பிக்கையுட னும் மலர்ச்சியுடனும் காணப்படுகின் றது. ஏனென்றால் இந்த ஆடுகள்தான் அவரது குடும்பத்தினரதும் வாழ்க்கை யைக் கொண்டு நடத்த காரணமாக உள் ளன.

அவர் இது பற்றிக் கூறுகையில்,

ஆரம்பத்தில் நான் இரண்டு ஆடுகளை வாங்கினேன். பின்னர் 10 ஆயிரம் கொ டுத்து மேலும் ஆடுகளை வாங்கினேன். இப்பொழுது என்னிடம் ஒன்பது ஆடுகள் உள்ளன.

சர்வதேச அரச சார்பற்ற உதவி நிறுவன மான (CARE) கெயார் நிறுவனத்தினூடா கவே இந்த ஆடுகளை வாங்குவதற்கான உதவிகளைப் பெற்றேன். அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன் என்று மாரியாயி கூறினார்.

மேற்படி நிறுவனத்தின் வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் நுன் நிதிய திட்ட இணைப்பாளரான தயாபரன் வனிதா தான் சார்ந்த நிறுவனத்தின் பணிபற்றிக் குறிப்பிடுகையில் கெயார் (CARE) நிறுவனம் நாடு முழுவது முள்ள இடம்பெயர்ந்து மீள் குடியேற்றப் பட்டுள்ள மக்களுக்கான குடிநீர், சுகாதா ரம் மற்றும் வாழ்வாதாரம் போன்ற வற்றை மேம்படுத்துவதற்கான பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்தத் திட்டங்கள்மூலம் மீள் குடி யேறிய மக்கள் தமது வாழ்க்கையை சுய மாக கொண்டு செல்வதற்கு உதவுகிறது.

அவர் இது பற்றி மேலும் கூறுகையில்



இந்த நிறுவனத்தின் சார்பாக நிலையான தும் சுயமாக இயங்கக் கூடியதுமான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்களுக்கு நாங்கள் நிதியினை வழங்கு கின்றோம். அந்தக் குழுக்களில் உள்ள அங்கத்தவர்கள் அனைவரும் தமக்குள் கலந்துரையாடி பிரச்சினைகளுக்கு முடிவு காணக்கூடியவாறான விடயங்களை முன் னெடுக்கின்றனர்.

கெயார் (CARE) நிறுவனம் சமயபுரத் திலுள்ள 105 குடும்பங்கள் தமது வாழ்வா தாரத்தினை மேம்படுத்துவதற்கான உதவி களைச் செய்து வருகின்றது. இந்தத் திட் டங்கள் அனைத்தும் பெண்கள் கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாக நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

எமது நிறுவனம் வேறு பல உள்ளூர் நிறுவனங்களுடன் கூட்டாக இணைந்தும் செயற்படுகின்றது. அதில் ஒன்றே கிராம அபிவிருத்தி நிறுவனமாகும். வவுனியாவி லிருந்து 6 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள அண்ணா நகரில் இதன் செயற்பாடுகளைக் காணலாம்.

இந்த கிராம அபிவிருத்தி நிறுவனத் தின் சிரேஷ்ட உறுப்பினரான ராஸிக் முஹம்மட் கருத்துத் தெரிவிக்கையில்,

கல்வியுடன் தொடர்புடைய பல திட் டங்களை வேறு பல நிறுவனங்களுடன் இணைந்து செய்துள்ளோம். இம்முறை நாங்கள் சுய தொழிலுடன் நீர் மற்றும் சுகாதாரம் அடங்கலாக கெயார் நிறுவனத் துடன் இணைந்து இங்கு செய்கிறோம்.

38 வயதான பெனடிட்ற் ராகினி இது பற்றிக் கூறுகையில்,

எங்களுக்கு மலசல கூடம் அமைத்துக் கொடுத்துள்ளதே பெரிய உதவியாகக் கருதுகிறோம். மலம் கழிப்பதற்கு கட லோரங்களுக்கே நாம் போக வேண்டிய நிலை இருந்தது. ஒரு புறம் நுளம்புத் தொல்லை மறுபுறம் இராணுவத்தின் பாது காப்பு பிரச்சினைகள் காரணமாக கடலோ ரம் போக முடியாத நிலை வரும்.

ஆனால் தற்போது இத்தகைய பிரச்சி னைகளிலிருந்து விடுபட்டுள்ளோம். கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாக 131 குடும்பங்கள் நன்மை பெற்றுள்ளன.

வாழ்வின் வர்ணங்கள்

புத்தளம் மாவட்டத்திலுள்ள சலாமாபாத் கிராமத்தில் பெண் கள் அமைப்பின் தலைவியான மொஹமட் தாவூர் சவூரா தமது வாழ்வின் வர்ணங்களை பகிர்ந்து கொள்கின்றார்.

நான் இந்த மகளிர் சங்கத்தின் தலைவியாக இருக்கின்றேன். எங்களது சங்கத்தில் 40 அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். அதில் 37பேரிற்கு கடன் கொடுத்துள்ளோம். கடன் தொழி லைப்பொறுத்து கொடுக்கப்படும். முதல் தடவையாக 15000 கொடுத்தோம். அடுத்து அவர்கள் செய்கின்ற தொழிலுக்கு எவ்வளவு மூலதனம் தேவையோ அதே அளவு கடன் கொடுக்கின்றோம். ஒடோட் நிறுவனத்தினால் கடன் கொடுக் கப்படுகின்றது. இந்த கடனை பெற்றவர்கள் மூலதனம் இல் லாது அவர்கள் இந்த தொழிலை செய்துகொண்டிருக்கும் போது கிடைத்த வருமானத்தினை விட அவர்கள் கடன்



பெற்ற பின்பு அவர்கள் அந்த மூலதனத்தை பயன்படுத்தி பெற்றுக் கொள்கின்ற வருமானம் அதிகமானதாக இருக் கின்றது. சேமிப்பும் செய் கின்றார்கள். கடன் பெறு வதற்கு அடிப்படை 2000 ரூபா சேமிப்பு செய்திருக்க வேண்டும்.

அதைத் தொடர்ந்து அவர்களால் எவ்வ ளவு சேமிக்க இய லுமோ அதை சேமிக் கின்றார்கள்.

சாவரம்

பெண்கள் உரிமைகள் தொடர் பாக வாழும்பு நகரில் உள்ள சில பெண்கள் கூறிய கருத்துக்களை சத் தியவாணி தொகுத்துத் தருகின்றார்.


பெண்கள் தெரிந்து வைத்துள்ள விடயங்கள் அவர்கள் எதிர்நோக் கும் உரிமை மீறல்கள் தற்போது பெண்களுக்குள்ள உரிமைகள் பற்றி இவர்கள் கருத்துத் தெரிவிக்கின்ற னர்.

ஊடகவியலாளரான

பெண்கள் உரிமை தொடர்பாக பெண்களின் கருத்து

ராதிகா சுதர்சனி

நான் ஒரு ஊடகவியலாளர் என்ற வகையில் தற்பொழுது நாட்டில் நில வுகின்ற பிரச்சினைகள் காரணமாக எமது உரிமைகள் மறுக்கப்படுகின் றன. இந்த ஒரு நிலமையிலும் நாம் செயற்படுகின்றோம். பிறஸ் கொன் பிரன்ஸ் போன்ற பல் விடயங்க ளுக்கு பெண்கள் பெரும்பாலும் அழைத்துச் செல்லப்படுவதில்லை. நாட்டு நிலைமையே இதற்கு கார



உரிமையில் ஆண், பெண் வேறுபாடில்லை

பேசுவோமாக இருந்தால் இன்று பெரும்பாலான பெண்கள் குடும்பப் பெண்களாகவே இருக்கின்றனர். இத னால், அவர்களது வாழ்க்கை இன் னொருவரில் தங்கியிருக்கும் நிலை யில் உள்ளார்கள். இதன்காரணமாக அவர்கள் தமது குழந்தை களையும் அவ்வாறே வளர்க்கின்றார்கள். ஆனால், குழந்தைகள் இன்றைய சூழ்நிலைக்கேற்ப அவர்களது எதிர் காலத்தை நோக்கஏக் கொண்டு வளர்க்கப்பட வேண்டும்.

காரணமாக உள்ளது.

அனுஷா வயது(30)-ஆசிரியை

நான் ஆசிரியையாக இருந்த பொழுதிலும் ஆண்களைப் போன்று சமமான உரிமை இருக்கின்றது. ஆனால், அதை அனுபவிக்க முடிய வில்லை.

போக்குவரத்தின் போதும் பஸ்க ளில் பயணம் செய்யும் பொழுதும் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றோம். கற்பவதியாக இருந்தாலும்கூட வைத்தியசாலைக ளில் வரிசைகளிலேயே காத்து நிற்க வேண்டியுள்ளது.

கல்வியை எடுத்துக்கொண்டால் நாம் விரும்பிய துறையில் படிப்ப தற்கு குடும்பமோ, சமூகமோ விரும்புவதில்லை. அப்படிப்படித்தா லும்கூட வேலை கிடைப்பதில்லை.

திருமதி சாரதா மகேஸ்வரன் Project Manager

பெண்களின் உரிமைகள் பற்றிப்

வெள்ளம் வடிந்தும் மக்களின் கண்ணீர் இன்றும் காயவில்லை

கடந்த வருட இறுதியில் இலங்கையில் பெய்த கடும் மழையின் காரணமாக 210533 பேர் பாதிக்கப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. வெள்ளத்தால் அதிகளவு பாதிப்புகளை எதிர்கொண்ட மாவட்டங்களில் அம்பாறையும் ஒன்று. இந்த மாவட்டத்தில் ஏறத்தாழ 30 ஆயிரம் பேர் வரை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த பெட்டகத்தை தொகுத்தளிக்கிறார் ரமணன்.

வெள்ளம் வடிந்தோடிய பின்னும் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களிலிருந்து கவலை இன்னும் கரைந்தோடவில்லை. கடந்த வருடம் பெய்த கடும் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களில் ஒருவர் தான் ரமேஷ். வருடம் தோறும் தாங்கள் வெள்



ளப் பெருக்கினால் பாதிப்பிற்குள்ளாகுவதாக கவலை தெரிவிக்கின்றார். 'எங்களுக்கு டிசெம்பர் மாதம் வந்தால் ஒரே மழையும் தண்ணியுமாகத்தான் கிடக்கும். எங்களுடைய பக்கம் வெள்ளம் கூட வரக் காரணம். கேம்பிற்கு அருகே வயல் இருப்பதுதான் வயல் முழுவதும் தண்ணி நிரம்பிடும். அதனால எங்கட ரோட்டு வழிய நீர் நிரம்பி விடும். வீடுவழியவும் வெள்ளம் வந்திடும். கேம்பிற்கு பக்கம் இருக்கிற அயல் கிராமம் அயலில் உள்ள எல்லா வீடுகளிற்குள்ளும் தண்ணி வந்திடும். அதனால பிள்ளைகளுக்கு படிக்கிறதும் கஷ்டம் மற்றும் சாப்பாட்டிற்கு கஷ்டம். தொழில்களும் இல்லை. இங்க அரசாங்கத்தொழில் செய்ற ஆட்களின் அளவு குறைவு. குடித்தொழில் செய்ற ஆட்கள் தான் எல்லா rum. தொழில்கள் இல்லை.

தமது வாழ்வாதாரத்திற்கான வழிமுறைகளை எல்லாம் வெள்ளம் கொண்டு சென்று விட்டதாகக்கூறுகின்றார் சாந்தி: 'கடும் மழை காரணமாக வீடு எல்லாம் பாதிக்கப்படுது. செய்த பயிர் முழுவதும் தண்ணியில முற்றாக அழிந்து விட்டது. ஒழுங்கான பராமரிப்பின்றி காணப்படும் உட்கட்டுமானங்களே வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்குக்காரணம் என்று இந்தப்பகுதி மக்களின் குற்றச்சாட்டு.

இது குறித்து காரைதீவு பிரதேச செயலாளர் இராமகிருஷ்ணனை தொடர்பு கொண்டு கேட்டோம். ' இது சம்பந்தமாக நாங்கள் இடர்முகாமைத்துவக்குழு எங்களிடம் இருக்கின்றது. Practical X என்ற நிறுவனம் இது விடயத்தில் எங்களுக்கு உதவி செய்கிறது. நாங்கள் ஒரு வேலைத்திட்டம் ஒன்றைத்தயாரித்து வைத்திருக்கின்றோம். அதனடிப்படையிலே இங்கே ஒரு முழுமையான ஒரு வடிகால் மைப்புத் திட்டம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். தற்போது பகுதி பகுதியாக சில இடங்களிலே வடிகால்களை அமைத்து வைத்திருக்கின்றார்கள். அந்த வடிகால மைப்பிலும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. நியாயமான லெவலிங் என்று சொல்லப்படுகின்ற அந்த ஒரு முறையை கணிக்காத காரணத்தினாலே தற்போதும் வெள்ளம் தேங்கி நிற்கின்றன. ஆனால் பிர தேச சபை இந்த விடயத்திலே கூடிய கவனத்தை எடுத்து வருவதாக நான் அவதானித்திருக்கின்றேன். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதோடு மட்டும் நின்று விடாது அவர்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளையும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

அந்த வகையில் CARE நிறுவனம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துப்புரவுப் பகுதிகளை மேற்கொண்டு வருவதோடு பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு சாராருக்கு தற்காலிகத்தொழில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததாகக்கூறுகின்றார் அந்த நிறுவனத்தின் வெளிக்கள அதிகாரியான இரோஷன். 'அப்படிப்பாதிக்கப்பட்டவர்களில் நாங்கள் அடையாளம் காணப்பட்டவர்களை வைத்துத் தான் இந்த areaகளை clean பண்ணும் போது அவர்களை cash work என்னும் அடிப்படையில் வேலைக்கு அமர்த்தி இருந்தோம். எங்களால் முடிந்த அளவிற்கு அக்கரைப்பற்றுப்பிரதேசத்திலே ஆலையடி வேம்பு அக்கரைப்பற்று ஸ்டேட் டிவிஷன்லே 85 பேரையும் அம்பாறையில இருக்குற பட்டியடிபிட்டி பாலத்தை clean பண்ணுவதற்கு ஒரு நாளைக்கு 50பேர் என்ற அடிப்படையில் 100பேரிற்கு வேலைவாய்ப்பினை வழங்கி இருந்தோம். திருக்கோயில் பிரதேசத்திலும் இவ்வாறு எங்களுடைய வேலைகள் நடந்து சென்றது. இப்படியாக தினக்கூலியில் வேலை செய்பவர்களுக்கு ஒரு தற்காலிக வருமானத்தை கொடுக்கக்கூடியதாக இருக்கின்றது.

தற்காலிக தீர்வுகள் போலவே நீண்டகால நோக்கிலும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது அவசியமாகின்றது. அந்த வகையில் உணவு விவசாய ஸ்தாபனம் சில ஏற்பாடுகளை செய்திருப்பதாக தெரிவிக்கின்றார் உணவு விவசாய ஸ்தாபனத்தின் நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் மோசஸ்: ' பொருட்கள் என்னும் போது அவர்கள் என்னத்தை இழந்திருக்கின்றார்கள் என்பதை asses பண்ண வேண்டும். இதற்கு நாங்கள் அந்த சம்பந்தப்பட்ட தினைக்களங்களை நாங்கள் தொடர்பு கொள்வோம். தற்போது அது நடந்து கொண்டிருக்கின்றது. எங்களால் இதற்குரிய பட்ஜெட் தயாரித்திருக்கின்றோம். இதற்குரிய உதவி செய்யும் நிறுவனம் அதற்குரிய உதவிகளை வழங்கும் போது அதைப்பற்றி கூடுதலாக நாங்கள் ஆராயக் கூடியதாக இருக்கும்.

ஏற்கனவே சுனாமியினால் பாதிக்கப்பட்டு தற்போது மீண்டும் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் அவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான சுய தொழில் முயற்சிகளுக்கான உதவிகளை சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் வழங்கி வருவதாகக் கூறுகின் றார் அந்த நிறுவனத்தின் திட்ட முகாமை யாளரான சிவசுப்ர மணியம்.

'தொழில் முயற்சிகள் பாதிக்கப்பட்டமைக்கு நாங்கள் அவர்களுக்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கின்றோம். பாதிப்புகள் தொடர்வது மக்களை பொறுத்தவரையில் மன உளைச்சலை தொடர்ந்து ஏற்படுத்துகின்றது. இதனால் மக்கள் பாதிப்புக்களிலிருந்து நிரந்தரமாகவே விடுபடவே விரும்புகின்றார்கள்.

அறிவோம் தெரிவோம்

மனிதர்களின் வாழ்விடம் என்பது அடிப்படையானது. இயற்கையின் சீற்றம் மற்றும் யுத்த சூழ்நிலைகள் மக்களை தனது இருப்பிடங்களை விட்டு இடம்பெயரச் செய்து வருகிறது. உலகளாவிய ரீதியில் இடம்பெயர்வுகள் ஏற்பட்ட வண்ணமே இருக்கின்றன. இவ்வாறு இடம்பெயர் மக்களுக்கான இருப்பிட வசதிகளை ஏற் படுத்திக் கொடுத்தல் சவால் மிக்க பணிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்காக இருப்பிடங்களை அமைத்துக்கொடுப்பதற்கு சர்வதேச ரீதியில் சில அடிப்படை நியமங்கள் முன்மொழியப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் மனித நேய சாசனமும் அனர்த்த மறுசீரமைப்பின் அடிப்படைத்தரங்களில் சில விடயங்களை முன் வைத்து இருக்கின்றது. SPHERE திட்டம் எனக்குறிப்பிடப்படுகின்ற மனிதாபிமான பணிகளுக்கான அடிப்படைத்தரங்களில் வீடமைப்புக் குறித்து பல்வேறு விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள இருப்பிட வசதி மற்றும் பாதுகாப்பு தொடர்பான தீர்வுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கவனிப்பு பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் என்பவற்றின் அடிப்படையில் முதன்மைப்படுத்தப்படுகிறது. உள்ளூர் நடைமுறைத்திட்டமிடல் பயிற்சியானது பாதுகாப்பான மற்றும் அத்தியாவசியத் தேவைகளை வழங்கக்கூடிய வசதிகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

உதாரணமாக குழுவாக வசித்தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் சுயசமாளிப்புத் திட்டங்கள் அனைவருக்கும் தண்ணீர் சுகாதாரம் ஆரோக்கியம் கழிவு நீக்க இடம் கல்லறைகள் பாடசாலைகள் பிரார்த்தனைக் கூடங்கள் மகிழ்வாக பொழுதை கழிக்க இடங்கள் போன்றன இருத்தல் அவசியமாகும். வாழ்வியல் தேவைகளை நிறைவு படுத்தும் வகையிலான இருப்பிட வசதிகள் வழங்கப்படுவது அவசியமானதாகும்.



உதாரணமானதாக ஒரு தனிநபருக்குரிய நிலப்பரப்பின் அளவு 3.5m^2 ஆகும். குறிப்பிட்ட பிரதேசமானது பால்நிலையின் அடிப்படையிலும் வயது அடிப்படையிலும் குடும்ப அடிப்படையிலும் பாதுகாப்பான முறையில் பிரிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். வீட்டுத்துறையினரின் தேவையின் அடிப்படையில் இக்காரணிகள் தீர்மானிக்கப்படும். இருப் பிட வசதி மற்றும் பாதுகாப்பு த்தொடர்பான வடி வமைப்பானது பாதிப் புற்ற மக்களின் தேவைப்பாடுகள் சூழல் பாதுகாப்பு மற்றும் சுகா தார பாதுகாப்புக்களின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட வேண்டும். பாதுகாப்பான முறையில் கட்டிடங்களை அமைப்பதுடன் உள்நாட்டு மக்களின் கொள்வனவு சக்தியை உயர்த்தக் கூடிய வகையிலும் கட்டமைப்பு உருவாக்கம் மேற்கொள்ளப்பட வேண்டியது அவ சியம்.

இடம்பெயர்ந்தோரை நோக்கி NRC யின் பணி

சர்வதேச அரச சார்பற்ற நிறுவன மான நோர்வே அகதிகளுக்கான ஆலோசனைக் குழு NRC புத்த ளம் மாவட்டத்தில் அதன் பணி களை மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக இடம் பெயர்ந்த மக்க ளுக்கு அடிப்படை ஆவணங்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் NRC இன் மாவட்டத் திட்ட உத்தி யோகத்தரான **நல்லியா ஹாதரை** நேர்காணுகின்றார் எமது செய்தியாளர் அமீர்.ஏ.உசெயின்:

எவ்வாறானவர்கள் உங்களிடம் ஆதரவை கேட்டு வருகின்றார்கள் என கூற முடியுமா?

உள்ளூர் யுத்தத்தினால் இடம் பெயர்ந்த மக்கள் பெரும்பாலாக வடக்கு கிழக்கு மாகாண மக்கள் எமது சேவையை பெறுவதற் காக வருகின்றார்கள்.

என்ன வகையான ஆவணங்கள் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் உதவுகின்றீர்கள்?

முக்கியமாக பிறப்பு அத் தாட்சிப்பத்திரம், திருமணப்பதி வுப்பத்திரம், இறப்புப்பதிவுகள், அடுத்தது அவர்களது சொந்த ஊரில் உள்ள சொத்துக்கள் தொடர்பான உறுதிப் பத்திரங் கள்.

கூடுதலாக என்ன வகையான ஆவணங்களை பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் உங்களிடம் வந்திருக் கின்றன?

90 வீதமானவை பிறப்பு அத் தாட்சிப்பத்திர விண்ணப்பங்கள்.

ஏன் அவ்வாறான விண்ணப் பங்கள் உங்களிடம் வருகின்றன குறிப்பாக பிறப்பு அத்தாட்சிப்பத் திரங்கள் வேண்டும் என கூறி?

இலங்கையை பொறுத்தமட்டில் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ஒரு பிரதான அத்தாட் சிப்பத்திரமாக உள்ளது. இன்று உங்களுக்கே தெரியும். எமது நாட்டின் இந்தக் காலப் பகுதியில் உங்களது தேசிய அடையாள அட்டை இன்றி உங்களால் எவ்விடமும் போக முடியாது. தேசிய அடையாள அட்டையை பெறுவதற்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மிக முக்கிய ஆவணம். அது இல்லாமல் நீங்கள் பாட சாலையில் அனுமதி பெறுவதாய் இருந்தாலும் வேலை வாய்ப்பை பெறுவதாய் இருந்தாலும் கடவுச் சீட்டு பத்திரத்தைப் பெறுவதற்கும் உங்களுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் முக்கியமான தொரு ஆவணமாக உள்ளது. தவிர ஒரு பிள்ளையின் பிறப்பை பதிவு செய்வதற்கு பெற்றோரின் பிறப்புப் பத்திரம் அவசியமான ஆவணமாக கருதப்படுகின்றது. இந்த அடிப்படையில் பிறப்பு அத்தாட் சிப்பத்திரம் முக்கியமானதொரு ஆவணமாக உள்ளது.

பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாத ஒருவர் அல் லது அதை இழந்த ஒருவர் உங்களிடம் அந்த பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை பெற்றுத்தருமாறு கோரும் பட்சத்திலே நீங்கள் எவ்வளவு காலத்திலே அதை பெற்றுக் கொடுக்கக் கூடியதாக



நஸ்லியா ஹாதர், NRC

இருக்கும்?

ஒரு பிறப்பு அத்தாட்சிப் பத்தி ரம் அவர் பிறந்தும் பதிவு செய் யப்பட்டிருக்கு மாயின் அதே நேரம் அதன் ஒரு பிரதியை அவர் வைத்திருப்பாரா யின் இரு வாரங் களுக்குள் எங்களால் அப் பத்திரத்தை பெற்றுக் கொடுக்க முடியும். அவ் வாறு இல்லாவிட்டால் எங் களுக்கு 3 மாத காலம் தேவை. அவ்வாறு பதியப் படாதவிடத்து 6மாதங்கள் தொடக்கம் 2 வருடங்கள் வரை எடுக்கும் புதிய பிறப்புப்பத்திரம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு.

பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெற்றுத்தருமாறு கூறி உங்களிடம் வந்து சேர்ந்த விண் ணப்பங்களில் எத்தனை வகையான விண்ணப்பங் களுக்கு அவ்வாறான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை பெற்றுக்கொடுத்திருக்கிறீர்கள்?

வழமையாக NRC நிறுவனம் இன்று relocated என்று அழைக்கப்படும் இடங் களுக்கு நாம் சென்று ஒவ்வொரு விண் ணப்பதாரியையும் நாம் சந்தித்து அவர்களிடம் இருந்து முழுத்தகவல்களையும் பெற்றுக்கொள்கிறோம். அந்த அடிப்படையிலே பெற்ற தகவல்கள் 9500 விண்ணப் பங்கள் எம்மிடம் உள்ளன. அவற்றில் 60% மானவை பிறப்பு அத்தாட்சிப் பத்திரங் களை நாங்கள் பெற்று மீள அவர்களிடம் ஒப்படைத்து இருக்கின்றோம். இன்னும் 20% மானவை பிறப்பு அத்தாட்சிப் பத்திரங் கள் எம்மிடம் கைவசம் உள்ளன. இன்னும் இரு மாதங்களுக்குள் அவற்றை நாங்கள் மீள அந்த விண்ணப்பதாரிகளுக்கு திரும்ப செலுத்துவோம். இன்னும் 20% மானவை விண்ணப்பங்கள் அந்தந்த பிரதேசங் களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

உள்ளூரில் இடம்பெயர்ந்த இந்த அகதி மக்களுக்கு நீங்கள் பெற்றுக்கொடுக்கும் இந்த பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலம் அவர்களது வாழ்க்கை நிலைமையில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்படுகின்றது என்று குறிப்பாக சொல்லமுடியுமா ?

இன்று உங்களுக்குத் தெரியும் கொழும்பு செல்வது என்பது மிக முக்கிய மான ஒரு தேவையாக உள்ளது. எந்த ஒரு விடயத்திற் குமே அவர்கள் கொழும்பு செல்ல வேண்டிய நிலையிலுள்ளது. இந்த அடிப்படையில் இன்றும் நகரின் முக்கிய இடங்களுக்கு செல்ல வேண்டுமானாலும் ஒரு வேலையை பெற்றுக்கொள்வதா யிருந்தாலும் கடவுச்சீட்டு ஒன்றை பெற்று வெளிநாடு செல்ல வேண்டுமாயிருந்தா லும் இந்த பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மிக முக்கியமான ஒன்றாக இருக்கின்றது.

தகவல் பெட்டி

இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிக்கான வழிகாட்டல் கோப்பாடுகள்

சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட் டம், இலங்கைச் சட்டம் மற்றும் பிரயோகிக்கப்படக் கூடிய அனைத்து சர்வதேச நியமங்களின் வழிகாட்டல்களின்படி, இலங்கையில் மனிதா பிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளை செயற்திறனுடன் அமும் படுத்துவதற்கு ஏதுவாக பின்வரும் வழிகாட்டல் கோட்பாடுகளை கீழே குறிப்பிடப்பட்ட கையொப்பமிட்டோர் மீள் உறுதிப்படுத்துகின்றனர். இதில் கீழ் கையொப்மிட்டோர் தங்களது பணியாளர்கள் மற்றும் அவர்களது நடவடிக்கை அமும்படுத்தும் பங்காளர்கள் என்போர் (சர்வதேச/உள்ளூர் அரசசார் பற்ற ஸ்தாபனங்கள், ஐ.நா, செஞ்சிலுவைச் சங்கம் போன்றன) பின்வரும் 10 கோட்பாடுகளை நடைமுறைச் சட்டங்களின் கீழ் இயன்றளவு கடைப்பிடிக்க பெரும் முயற்சி செய்வர்.

1. இலங்கையில் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதில், பங்களிப்பதற்கு நாங்கள் ஒன்றிணைந்து பணியாற்று கின்றோம். எங்கள் உதவிகள் மக்களின் வேதனைகளை நீக்குதல், வறுமையை ஒழித்தல், இலங்கையின் மோதல் நிலைமைகளுக்கு அமைதியான தீர்வொன்றிற்கு ஆதரவளித்தல் உட்பட சமூகங்கள் தன்னிறைவை அடைய உதவுதல் போன்றவை குறித்துக் கவனம் செலுத்துகின்றன.
2. இடவமைவு, இனம், பால்நிலை, சமூக அந்தஸ்து அல்லது மதம் என் பவற்றைக் கருதாது இனங் காணப்பட்ட தேவைகளின் அடிப்படையில் மட் டுமே நாங்கள் உதவிகளை வழங்குகிறோம்.
3. எங்களது உதவிகள், வழங்கல்கள், வாகனங்கள், வசதிகள் அல்லது உபகரணங்கள் என்பன எந்தவொரு இராணுவ, அரசியல் அல்லது பிரி வினை நோக்கங் களுக்காக உபயோகிக்கப்படுவதனை ஏற்றுக் கொள்ளாத துடன் நாங்கள் பக்கச்சார்பின்மையுடன் இருப்போம்.
4. சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் என்பவற்றுக்கான மதிப்பளித்தலை நாங்கள் வேண்டுகிறோம். நாங் கள் உள்ளூர்ச் சமூகங்கள் வெளிப்படுத்திய விருப்புகளின் விளைவாக பணியாற்றுவதுடன் மக்களது கௌரவம், அவர்களது கலாச்சாரம், மதம் மற்றும் பாரம்பரியங்களை மதிக்கின்றோம்.
5. நாங்கள் உதவ நாடுபவர்களுக்கு நாங்கள் பொறுப்புக் கூற வேண்டிய வர்களாவோம். எங்களது உதவிகள் ஒளிவு மறைவு இல்லாதவை என் பதை நாங்கள் உறுதிப்படுத்துவோம். அபிவிருத்தி அல்லது மனிதாபிமான உதவிகளுக்கான வழங்கல்கள் அல்லது உபகரணங்களில் ஊழல் எதனை யும், களவு அல்லது துஷ்பிரயோகங்களை அனுமதிக்கமாட்டோம்.
6. உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் எங்களது செயற்பாடுகளை அமைத்துக் கொள்வதுடன் உள்ளூரில் கிடைக்கும் வளங்களை அதிகரிப்பதையும் இலக்காகக் கொண்டுள்ளோம். சிவில் சமூகங்கள், வர்த்தக சமூகங்கள், உள்ளூர் அதிகார சபைகள் போன்ற உள்ளூர் அமைப்புக்கள், தற்போதைய தேவைகள் குறித்து கவனம் செலுத்த மற்றும் எதிர்கால அவசர நிலைமைகளைத் தவிர்க்க அல்லது எதிர் கொள்ளத் தயாராவதற்கு வலுவூட்டுகிறோம்.
7. நாங்கள், சமூகங்களை அவர்களது நன்மைகளுக்காக அமுல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைக்க, திட்டமிட, முகாமைத்துவம் செய்ய, நடைமுறைப்படுத்த மற்றும் மதிப்பீடு செய்வதில் அவர்களை ஈடுபடுத்துவதற்கு நாடுகிறோம்.
8. நாங்கள், எங்களது செயற்பாடுகளை அரசாங்கம் மற்றும் தொடர்புடைய அனைத்து அக்கறையாளர்களுடனும் ஒவ்வொரு மட்டத்திலும் ஒருங்கிணைக்கின்றோம்.
9. உதவி தேவைப்படும் அனைத்து மக்களுக்குமான அடிப்படைத் தேவையாக கட்டுப்பாடுகளற்ற வழிவகைகளை நாம் வேண்டிக் கொள்கின் றோம். மனிதாபிமான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஊழியர்களுக்கான அதிகாரத்தை விரைவில் வழங்குவதையும் சுங்கப்பகுதியிலிருந்து வெளிக்கொண்டு வருவதையும் நாம் எதிர் பார்க்கின்றோம்.
10. சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்சிகளிடமும் முகவர் ஸ்தாபனங்கள் மற்றும் அவர்களது ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தை தற் காத்து மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துமாறு வேண்டுகிறோம். ஊழியர் கள் வன்முறை, கடத்தப்படல், தொந்தரவு அல்லது அச்சுறுத்தல்களுக்கு ஆளாகுவதை நாம் அனுமதிக்கமாட்டோம். எங்களது பணிகளுடன் தொடர்புகளற்ற ஆட்கள் அல்லது பொருட்களை போக்குவரத்த செய்வதற்கு எங்களது வாகனங்கள் உபயோகப்படுத்தப்படல் கூடாது.

எங்களது செயற்பாடுகள் சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் கோட்பாடுகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்- செம்பிறை இயக்கங்க ளது ஒழுக்கக் கோவையுடன் நிலையானதாக இருப்பதை நாம் உறுதிப் படுத்த விரும்புகிறோம். மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து http://www.ifrc.org/publicat/conduct/code.asp உடன் தொடர்பை ஏற் படுத்தவும். இவ்வழிகாட்டல் கோட்பாடுகள் ஓர் சர்வதேச ஒப்பந்தமோ அல்லது சட்டவலுவான ஆவணமோ அல்ல.

மீண்டும் வாழ்வோம் (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS USAID FROM THE AMERICAN PEOPLE

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.